கேட்கிறர் என்று நினைக்கிறேன். பென்ஷன் என்ற வார்த்தைக்குப் பொருளே வேறு எந்தத் தொழிலும் செய்யமுடியாமல் இருந்து, எந்தவிதமான வருவாயும் பெறமுடியாமல் இருப்பவர்களுக்குக் கொடுப்பதுதான் பென்ஷன். பென்ஷனும் வாங்கிக் கொண்டு சம்பளமும் வாங்கலாமென்பது நியாயமாக இருக்காதென்று கருதுகிறேன். அது தேவை என்ருல் அதைப்பற்றிக் கவனிக்கலாம். ஆனல், அது நியாயமாக இருக்காது.

மாநிலத்திற்குக் கன ரக இயந்திரத் தொழிற்சாலை

35. வினு—திரு. எஸ். சி. சுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் கன ரக இயந்திரங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: இதை இனிமேலாவது அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கேள்வியில் கனரகத் தொழில் என்றுதான் இருக்கிறதே ஒழிய, எந்த வகைக்கு என்று தெளிவாக இல்லை. கனரகத் தொழில்கள் பலவகையாக இருக்கக் கூடும். ஆகவே கனரகத் தொழில் என்ன வகையிலே என்று கேட்டு இருந்தால் பதில் அளிக்கலாம். ஆனல், கேள்வி அப்படியில்லை, பொதுவாக, கனரகத் தொழில் என்றுதான் இருக்கிறது. தற்பொழுது அரக்கோணத்திலே ருஷ்யாவின் உதவியுடன் வார்ப்படத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படக்கூடும். அதேபோன்று அரசாங்கத்தின் சார்பிலே ராஜபாளையத்திலே சிமின்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, அந்த வகையிலேயும் தொழிற்சாலை அங்கு வரக்கூடும்.

DR. H. V. HANDE: Sir, is the Hon. Minister aware that the Arakonam plant requires a lot of raw materials such as scrap iron? If so, has he taken into consideration the question whether this plant would get adequate quantity of raw materials in the shape of scrap iron?

THE HON. THIRU C. N. ANNADURAI: All the necessary factors have been taken into consideration. We are assured of adequate raw materials.